## சுருக்கம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் – தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர் பேரூராட்சிக்கான தனிக் குடிநீர் திட்டம் – அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் பரிந்துரை – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ.3) துறை

அரசாணை (நிலை) எண் 31 நாள் 02.03.2009

மாசி 18 திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்கப்பட்டது:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் கடித எண் கோ.231006/உ.பொ.5/தி.மே.பி, நாள். 2.3.2009.

---

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர் பேரூராட்சிக்கான தனிக்குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற நிர்வாக ஒப்புதல் வழங்கக் கோரும் செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்படி தனிக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்படும் பகுதியின் மக்கள் தொகை 2001ம் வருட கணக்கெடுப்பின்படி, 29581 ஆகும் என்றும் வந்து செல்லும் மக்கள் தொகை 10,000 என்றும் குறிப்பிட்டுள்ளதோடு அடிப்படை ஆண்டு மற்றும் உச்சக்கால மக்கள்தொகையை கீழ்க்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

| 1 | ஆண்டு | அடிப்படை ஆண்டு 2010 | இடைக்காலம் 2025 | உச்சகாலம் 2040 |
|---|---|---|---|---|
| 2 | மக்கள் தொகை | 31800 | 35700 | 40100 |
| 3. | வந்துசெல்லும் மக்கள்தொகை | 10000 | 10000 | 10000 |
| 4 | 70 விழுக்காடு மக்கள் தொகைக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர்த் தேவை (லிட்டரில்) | 3005100 | 3373650 | 3789450 |
| 5 | 30 விழுக்காடு மக்கள் தொகைக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர்த் தேவை (லிட்டரில்) | 381600 | 428400 | 481200 |
| 6 | வந்து செல்லும் மக்கள் தொகைக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 18 லிட்டர் வீதம் குடிநீர்த் தேவை (லிட்டரில்) | 180000 | 180000 | 180000 |
| | மொத்த குடிநீர்த் தேவை (லிட்டரில்) | 3566700 ↓ | 3982050 | 4450650 |
| 7 | ஏற்கனவே வழங்கப்படும் குடிநீரின் அளவு (லிட்டரில்) | 1345000 | 1345000 | 1345000 |
| 8 | மீதமுள்ள குடிநீர்த்தேவை (லிட்டரில்) | 2221700 | 2637050 | 3105650 |
| | 10 விழுக்காடு குழாய் இழப்பு (லிட்டரில்) | 222170 | 263705 | 310565 |
| | மொத்த குடிநீர்த் தேவை (லிட்டரில்) | 2443870 | 2900755 | 3416215 |
| | 16 மணிநேர நீர் ஏற்றத்தின் படி நீர்உந்து திறன் (லி / நொ) | 2645 | 3022 | 3559 |

(75)



3. மேலும் திருச்செந்தூர் பேரூராட்சிக்கான தனிக்குடிநீர்த் திட்டத்தினை குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் கீழ் செயல்படுத்த (80 சதவீதம் அரசு மான்யம் மற்றும் 20 சதவீதம் பொது மக்கள் / உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு) ...... திருச்செந்தூர் பேரூராட்சி தனது தீர்மான எண் 337 நாள்.11.12.2008 ல் தீர்மானித்துள்ளது என்றும் திட்டம் முடிவுற்றவுடன் திட்டத்தினை பராமரிக்க உள்ளாட்சி அமைப்பிடம் ஒப்படைக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளதோடு 12.1.2009 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் வைக்கப்பட்டு வாரியம் தனது தீர்மான் எண். 2.8 ல் நிர்வாக ஒப்புதல் வழங்க அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவிவிற்கு பரிந்துரை செய்து தீர்மானித்தது.

4. அதிகாரம் அளிக்கப்பட்ட குழு 2.3.2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வாரிய பரிந்துரையை ஏற்று தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர் பேரூராட்சிக்கான தனிக்குடிநீர்த் திட்டத்தின் அமைப்புச் செலவு ரூ.1192.00 இலட்சங்கள் எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.16.60 இலட்சங்கள் எனவும், தனிநபர் செலவு ரூ.3748 எனவும் 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.13.04 எனவும் கணக்கிட்டு குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் கீழ் 80:20 அடிப்படையில் (80 விழுக்காடு அரசு மான்யம் – ரூ.953.60 இலட்சங்கள் மற்றும் 20 விழுக்காடு பொது மக்கள் / உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு – ரூ.238.40 இலட்சங்கள்) மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதனடிப்படையில் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்பதல் வழங்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பை ஏற்று தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர் பேரூராட்சிக்கான தனிக்குடிநீர்த் திட்டத்தின் அமைப்புச் செலவு ரூ.1192.00 இலட்சங்கள் எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.16.60 இலட்சங்கள் எனவும், தனிநபர் செலவு ரூ.3748 எனவும் 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.13.04 எனவும் கணக்கிட்டு குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் கீழ் 80:20 அடிப்படையில் (80 விழுக்காடு அரசு மான்யம் – ரூ. 953.60 இலட்சங்கள் மற்றும் 20 விழுக்காடு பொது மக்கள் / உள்ளாட்சி அமைப்பின்

ங்களிப்பு -ரூ.238.40 இலட்சங்கள்) மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி.)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம்.
திருச்செந்தூர் பேரூராட்சி – பேரூராட்சிகளின் இயக்குநர் மூலமாக

நகல்:
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் தனிச் செயலர், சென்னை 9
பொது (நூலகம்) / நிதி துறை, சென்னை–9.
ந.நி.(ம) கு.வ, (அநமு2 / குவ1 / குவ2 / குவ4. / வசெ) துறை, சென்னை–9
இகோ / உ.நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.